**சுருக்கம்**

தொழில் – 2015–2016–ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – தமிழ்நாடு உப்பு நிறுவனம் – இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் 120 டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட புரோமின் தொழிற்சாலை நிறுவுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழில் (எம்.ஐ.எப்.2) துறை**

**அரசாணை (டி) எண். 165** **நாள் : 08.09.2015**

மன்மத, ஆவணி 22,
திருவள்ளுவர் ஆண்டு –2046

**படிக்கப்பட்டது :**

ஆணை

2015–2016–ஆம் ஆண்டிற்கான தொழில் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் இராமநாதபுரம் மாவட்டம், மாரியூர் வாலிநோக்கம் உப்பு கூட்டுத் திட்டத்தில் ஆண்டொன்றுக்கு 120 டன்கள் உற்பத்தி திறன் கொண்ட புரோமின் தொழிற்சாலை ஒன்று ரூ.3 கோடி செலவில் நிறுவப்படும்."

2) மேற்காணும் திட்டத்தினை தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நிதியைக் கொண்டு குறிப்பிட்ட கால அளவிற்குள் நடைமுறைப்படுத்தவும் மற்றும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்படும் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் அரசுக்கு அறிக்கை அனுப்புமாறும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு உப்பு நிறுவனத்தினை அரசு பணிக்கிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ச. வி. சங்கர்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு உப்பு நிறுவனம்,
எல்எல்ஏ பில்டிங்,
735, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

V. [signature] 8.9.2015

**பிரிவு அலுவலர்**